**TNTT070026312026**

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கோவில்பட்டி**

முன்னிலை: திரு.M.மணிமேகலா,M..A., M.L.,
நீதித்துறை நடுவர் எண். 2
கோவில்பட்டி.

2026 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08–ம் நாள் செவ்வாய்கிழமை

**முதல் நிலை வழக்கு எண். 104/2026**

**கோவில்பட்டிமேற்கு காவல் நிலைய குற்ற எண். 281/2026**

| | | |
|---|---|---|
| அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>கோவில்பட்டிமேற்கு காவல் நிலையம். | : | குற்றமுறையிடுபவர் |
| –எதிர்– | | |
| கரண்குமார், வயது – 26/2026<br>த/பெ. சுரேஷ்குமார்,<br>38B, மேட்டு தெரு,<br>பாரதி நகர்,<br>மேட்டு தெரு,<br>கோவில்பட்டி தாலூகா,<br>தூத்துக்குடி மாவட்டம். | : | எதிரி |

இவ்வழக்கானது 18.06.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் முதல் விசாரணை வழக்கு எண். 104/2026 ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**உத்தரவு**

**1. அரசு தரப்பில் வழக்கின் சுருக்கம் :–**

இவ்வழக்கின் கடந்த 09.03.2026 ம் தேதி மதியம் 14.00 மணிக்கு கோவில்பட்டி பெத்தேல் இரயில்வே கேட் அருகில் சென்று கொண்டிருந்த கோவில்பட்டி மேற்கு காவல் நிலையத்தில் ரவுடி பதிவேடு உள்ள எதிரியான

கரண்குமார் தன் மீது வழிப்பறி, கொலை முயற்சி, கஞ்சா மற்றும் திருட்டு வழக்குகள் உள்ளதாகவும், அதனால் தனக்கு எதிரிகள் அதிகமாக உள்ளதாகவும், அவர்கள் யாராவது தன்னை நெருங்கினால் வெட்டி சாய்ப்பதற்கும் செலவுக்கு பணம் தேவைப்பட்டால் எவனாவது ஏமாலியை மறித்து பணம் பறிப்பதற்கும் மனித உயிருக்கு ஆபத்தையும், அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும் நோக்கத்தில் பொது இடத்தில் இந்திய படைக்கல சட்டத்தின் கீழ் கொடுரமான ஆயுதமான பெரிய அருவாளை வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி பிரிவு 25(1A) Arms Act–ன் கீழ், தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கோவில்பட்டிமேற்கு காவல் நிலைய ஆய்வாளர் எதிரி மீது குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230 BNSS–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலணை செய்தபோது எதிரிக்கு எதிராக பிரிவு 25(1A) Arms Act –ன் கீழ் குற்றத்திற்கு முகாந்திரம் உள்ளதாலும், மேற்படி குற்றமானது முற்றிலும் மாண்புமிகு தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்ககூடிய குற்றம் என்பதாலும் இவ்வழக்கினை மேல்விசாரணைக்காக மாண்புமிகு தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.

4. இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இந்த வழக்கு மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதால் இந்த வழக்கை விசாரணைக்காக பிரிவு 232(a) BNSS–ன் கீழ் தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

5. இந்த வழக்கின் பதிவுக்கட்டையும் சாட்சியத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் ஆர்.பி.எண். 88/2026 இவ்வழக்கின் சொத்துகளை பிரிவு 232(c)BNSS–ன் படி தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

6. இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்படுவது பற்றிய அறிவிப்பு மாவட்ட அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கு பிரிவு 232(d)BNSS–ன் கீழ் அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் எதிரி 12.10.2026 ஆம் தேதி

காலை 10.00 மணிக்கு மாண்புமிகு தூத்துக்குடி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

7. எதிரி தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உள்ளது என்று கூறினார்.

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு செப்டம்பர் 8–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MANIMEGALA

Digitally signed by MANIMEGALA
Date: 2026.09.08 23:56:39 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
கோவில்பட்டி.